| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.198/2018 | பி. சா .1 | தேதி.2.8.2022 | |
| பெயர் | திரு.ரங்கராஜ் | வயது | 62 |
| த/பெ. | திரு. மாதைய கவுடர் | கிராமம் | குத்தாரிபாளையம் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

புல எண். 747 க்குரிய பட்டா மற்றும் வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் 747/2 என்ற இடமானது வழிப்பாதைக்காக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண். 747 க்குரிய சொத்து தனிநபருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணில் உட்பிரிவிற்குரிய சொத்துக்களும் தனியாருக்குத்தான் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு சரியாக புரியவில்லை. 747 க்குரிய எந்த ஒரு சொத்தும் அரசாங்கத்துக்கு பாத்தியப்பட்டதில்லை என்றால் சரிதான். 747 க்குரிய நிலத்தின் உரிமையாளர்களுக்கு சொந்தமான வழித்தடம்தான் 747/2 க்குரிய வழித்தடம் என்றால் அது பொதுவான வழிப்பாதையாகும். 746, 748 க்குரிய சொத்தை எனது தந்தை விலைக்கு வாங்கும்பொழுது 747/2 க்குரிய வழித்தடத்தை சொல்லி வாங்கி உள்ளதாக எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தைக்கு சொத்தை விற்ற 746, 748 க்குரிய சொத்திற்குரியவர்களுக்கு 747 ல் நிலம் இல்லை என்றால் சரிதான். 747 ல் என் தந்தை 87 செண்ட் நிலத்தை விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான். என் தந்தைக்கு 87 செண்ட் நிலத்தை விற்பனை செய்த சண்முகசுந்தரம்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் என் தந்தைக்கு சொத்தை விற்பனை செய்த பத்திரத்தில் 747/2 ல் உள்ள வழித்தடம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எங்கள் குடும்பச்சொத்தை பொறுத்து 2016 ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டபோது அந்த பத்திரத்தில் மேற்கண்ட வழிப்பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. 8.6.1970 ல் 748 ல் 1 ஏக்கர் 91 செண்ட் நிலத்தை என் தந்தை விலைக்குப்பெற்றதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்தை ஒரு மாரக்காள் என்பவரிடமிருந்து என் அப்பா

விலைக்கு பெற்றுள்ளார் என்றால் சரிதான். மாரக்காளுக்கு 747 ல் நிலம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆனால் எனது முதல் விசாரணையில் மேற்கண்ட 8.6.1970 தேதியிட்ட பத்திரத்தில் வண்டித்தடம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மாரக்காளுக்கு எவ்வித உரிமையும் இல்லாமல் அவ்வாறு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு சொத்தை விற்றவர்களுக்கு 747 ல் எவ்வித நிலமும் இல்லாதபட்சத்தில் 747/2 ல் உள்ள வழிப்பாதை குறித்து அந்த கிரையாவணங்களில் சொல்லப்பட்டிருப்பது ஏற்கத்தகுந்ததல்லவென்றும் அந்த கிரையாவணங்களில் வழிப்பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் இந்த வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. 747 க்கு வடபுறத்தில் அமைந்துள்ள 748 லும் அதற்கு வடபுறம் அமைந்துள்ள 749 லும் கிழபுறத்தில் வண்டித்தடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். 748 , 749 க்கு கிழபுறம் வெளியே செல்வதற்கு பாதை உள்ளது என்றால் சரியல்ல. 749 லுள்ள சொத்துக்குரியவர்கள் அதற்கு கிழபுறமுள்ள தென்வடல் பாதையின் வழியாகவும் அந்த தென்வடல்பாதைக்கு கிழபுறத்தில் அமைந்துள்ள பாதையின் வழியாகவும் அதற்கு வெளியே போவார்கள் என்றால் சரிதான். 749 ல் எனக்கும் என் குடும்பத்ினருக்கும் நிலம் இல்லை என்றால் சரிதான். 748 ல் எனக்கும் என் குடும்பத்தினருக்கும் நிலம் உள்ளது என்றால் சரிதான். 748 ல் கிழபுறமுள்ள தென்வடல் பாதைக்கு கிழக்காக அமைந்துள்ள பூமி வழியாக வெளியே சென்றுவர பாதை உள்ளது என்றால் சரிதான். 747/2 , 748, 749 ஆகியவற்றில் உள்ள வழித்தடங்களில் மழைக்காலங்களில் நீர் வழிந்தோடும் என்றால் சரிதான். நீர்வழிந்தோடும் பாதையானது 747, 748, 749 ல் உள்ள உரிமையாளர்களுக்குத்தான் சொந்தமானது என்றால் இல்லை. அது பொது வழிப்பாதை. நாங்கள் ஏற்படுத்திக்கொண்ட வா சா ஆ 3 பாகப்பிரிவினை பத்திரத்தில் 747/2 ல் உள்ள பாதையானது எங்கள் நால்வருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என கூறி ¼ பாகம் என எழுதிஉள்ளோமா என்றால் இல்லை. வா சா ஆ 3 ஆவணத்தில் 8 ம் பக்கத்தில் அயிட்டம் 2 ஆக காண்பிக்கப்பட்ட சொத்திலும் 10 ம்பக்கத்தில் அயிட்டம் 4 ஆக காண்பிக்கப்பட்ட சொத்திலும் 11 ம்பக்கத்தில் முதல் பத்தியில் தடப்பாத்தியம் குறித்த சரத்துக்களிலும் 14 ம் பக்கத்தில் அயிட்டம் 4 பாதை பூமிகள் என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்ட சரத்துகளிலும் 17 ம் பக்கத்தில் அயிட்டம் 3 லும் 21 ம் பக்கத்திலுள்ள பொது ஷரத்துக்களிலும் 747/2 லுள்ள தென்வடல் பாதை குறித்து தரப்பினர்களுக்கு தலா ¼ பாகம் உரிமை என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு

தெரியவில்லை. வா சா ஆ 3 ன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட 24.11.2017 ல் ஏற்படுத்தப்பட்ட வா சா ஆ 4 ஆவணத்திலும் பின்னிட்டு வா சா ஆ 5 கிரைய ஆவணத்திலும் 747/2 பாதை குறித்த உரிமையை தவறாக ¼ என கிரையம் பெற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 747/2 க்குரிய வண்டித்தடத்திலுள்ள வாதியின் உரிமையையும் மற்ற உரிமையாளர்களின் உரிமையையும் தோற்கடிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்தான் மேற்கண்ட ஆவணங்களில் வழிப்பாதையில் ¼ பாகம் என தவறாக எழுதி உள்ளோம் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் வழக்கு வழித்தடம் குறித்து சொல்லி உள்ள பள்ளவாரி, நீர்வழிப்பாதை , இட்டேரி, ஆகியவற்றிற்கு எவ்வித ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வக்கீலிடம் கொடுத்துள்ளேன். நான் சொல்வது போல் எந்தவிதமான வருவாய் ஆவணப்பதிவும் கிடையாது என்றும் நான் வழக்கிற்காக ஆவணங்கள் உள்ளதாக பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் முதல் விசாரணையில் 100 வருடங்களாக வழக்கு வண்டிப்பாதையை பொதுப்பயன்பாட்டில் உள்ளதாக பொய் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு வண்டிப்பாதையானது 747 க்குரிய சொத்துக்குரியவர்களுக்கு மட்டும்தான் உரிமையானது என்றால் சரியல்ல. 748 ல் உள்ள வழிப்பாதையானது எங்களுக்கு மட்டும்தான் சொந்தமானது என்றால் சரியல்ல. அதுவும் எல்லோருக்கும் சொந்தமானது ஆகும். 747/2 ல் உள்ள வழித்தடத்தில் என்னிடம் சொத்தை வாங்கியவர்கள் குழாய் பதிக்க முயற்சி செய்தார்கள் என்றால் என் அப்பா இருக்கும்போதே 1986 லேயே போட்டு விட்டார்கள். எங்களிடம் விலைக்கு வாங்கியவர்கள் குழாய் பதிக்க முயற்சி செய்யவில்லை. அந்த வழிப்பாதையில் 6 ம் பிரதிவாதி மின் கம்பம் நட முயற்சி செய்தார் என்றால் சரிதான். பணம் கொடுக்கவேண்டுமென கேட்டதால் வேறு வழியாக கம்பம் போட்டுக்கொண்டார்கள். வாதி அவ்வாறு பணம் எல்லாம் கேட்கவில்லை என்றும் பணம் கேட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி 6 ம் பிரதிவாதிக்கு வா சா ஆ 3 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் சொத்தை விற்பனை செய்தார் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி ஆற்றிலிருந்து சட்டமுரணாக வழக்கு வண்டிப்பாதை வழியாக தண்ணீர் எடுத்துவர முயற்சி செய்து அதைத்தான் வாதி தடுத்தார் என்றால் சரியல்ல. மேற்கண்டவாறு தண்ணீர் எடுப்பதற்காகவேண்டி மின் இணைப்பு பெறுவதற்காகத்தான் மின் கம்பங்கள் அமைக்க முயற்சி செய்தார் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையில் வாதி 5,6

பிரதிவாதிகளை மிரட்டியதாக வழக்கிற்காகவேண்டி பொய் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது பங்காளிகளும் எங்களுக்கில்லாத வழிப்பாதை உரிமையை இருப்பதாகச்சொல்லி அந்தபாதையின் வழியாக தண்ணீர் எடுத்து வரலாமெனச்சொல்லியும் மின் இணைப்பு பெறலாம் என் கூறியும் 5, 6 பிரதிவாதிகளிடம் எனக்கில்லாத வழித்தட உரிமையை பொய்யாக உரைத்து சொத்தை அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சட்டவிரோத நடவடிக்கையையே வாதி தடுத்து நிறுத்தினார் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கோரியவாறு வழித்தட உரிமை குறித்தான விளம்புகை பரிகாரத்தையும் வழித்தட உரிமை குறித்து தவறாக ஏற்படுத்தப்பட்டுள்ள பத்திரங்களை ரத்து செய்ய வேண்டிய பரிகாரமும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

P K SIVAKUMAR

Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.08.03 10:39:09 +0530

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYAM